# திருமணத் திருப்பலி

## தொடக்கச் சடங்குகள்

தொடக்கப் பாடல்: (அனைவரும் எழுந்து நிற்கவும்)
(இறையரசின்) அன்பு மாந்தர் அனைவருமே வாருங்கள்
இறைவன் அழைப்பை ஏற்று அவரில் மகிழுங்கள்

இயேசுவில் நாமும் வாழ்ந்திட வேண்டும்
அவரின் பாதையிலே நாம் நடந்திட வேண்டும்
பாவம் போக்கிட வேண்டும் கோபம் போக்கிட வேண்டும் ~ என்றும்
அடுத்தவரை அன்பு செய்ய வேண்டும்

ஆவியின் வரங்கள் நாம் பெற வேண்டும்
அவரின் ஆற்றலோடு பணிபுரிய வேண்டும்
மனிதம் மலர்ந்திட வேண்டும் புனிதம் அடைந்திட வேண்டும் ~ அதனால்
இடைவிடாது நாம் செபிக்க வேண்டும்

அப: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.
எல்: ஆமென்.

அப: நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.
எல்: உம் ஆன்மாவோடும் இருப்பதாக.

பாவத்துயர்ச் செயல்:
அப: சகோதர சகோதரிகளே, தூய மறைநிகழ்வுகளைக் கொண்டாட நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்றுக்கொள்வோம்.

அப: எல்லாம் வல்ல இறைவனிடமும்...
எல்: சகோதர சகோதரிகளே, உங்களிடமும் நான் பாவி என ஏற்றுக்கொள்கின்றேன். ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும், கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன்.
(மார்பில் தட்டிக்கொண்டு) என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே.
ஆகையால், எப்போதும் கன்னியான புனித மரியாவையும் வானதூதர், புனிதர் அனைவரையும், சகோதர சகோதரிகளே உங்களையும், நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகின்றேன்.
அப: எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.
எல்: ஆமென்.

மன்னிப்பு மன்றாட்டு:
அப: ஆண்டவரே, இரக்கமாயிரும்.
எல்: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

அப: கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.
எல்: கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

அப: ஆண்டவரே, இரக்கமாயிரும்.
எல்: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

வானவர் கீதம்:
உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக.
உலகினிலே நன் மனத்தோருக்கு அமைதி ஆகுக.
உம்மைப் புகழ்கின்றோம். உம்மை வாழ்த்துகின்றோம்.
உம்மை ஆராதிக்கின்றோம். உம்மை மாட்சிப்படுத்துகின்றோம்.
உமது மேலான மாட்சியின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம்.
ஆண்டவராகிய இறைவா, வானுலக அரசரே, எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே, இயேசு கிறிஸ்துவே.
ஆண்டவராகிய இறைவா, இறைவனின் செம்மறியே, தந்தையின் திருமகனே.
உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மன்றாட்டை ஏற்றருளும்.
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.
ஏனெனில் இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர்.
நீர் ஒருவரே ஆண்டவர். நீர் ஒருவரே உன்னதர்.
தூய ஆவியாரோடு, தந்தையாகிய இறைவனின் மாட்சியில் இருப்பவர் நீரே.
ஆமென்.

திருக்குழும மன்றாட்டு:
அப: மன்றாடுவோமாக.
இறைவா, மனிதக் குலத்தைப் படைத்தபோது, ஆணும் பெண்ணும் ஒன்றாக வேண்டும் எனத் திருவுளமானீரே: திருமண உடன்படிக்கையால் இணைக்கப் பெறவிருக்கும் உம் அடியார்கள் (மணமகன், மணமகள் பெயர்களைக் குறிப்பிடுக) இவர்களை அன்பின் பிணைப்பால் ஒன்றாக இணைத்தருளும். இவ்வாறு இவர்கள் உமது அருளால் அன்பில் வளம் பெற்று அன்புக்குச் சாட்சிகளாய் விளங்கச் செய்வீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.
எல்: ஆமென்.

# இறை வார்த்தை வழிபாடு

முதல் வாசகம்:
தொடக்க நூலிலிருந்து வாசகம்.
அதிகாரம் 1, வசனங்கள் 26 முதல் 28 மற்றும் 31.

கடவுள், 'மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்' என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, 'பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்' என்றார். கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன.

வாச: இது ஆண்டவரின் அருள்வாக்கு.
எல்: இறைவனுக்கு நன்றி.

பதிலுரைப்பாடல்:
உங்கள் வாழ்நாளெல்லாம் உங்களுக்கு இறைவன் ஆசீர் அளிப்பார்

ஆண்டவர்க்கஞ்சும் நீ பேறுபெற்றோன் ~ அவர் காட்டிய வழியில் நீ நடப்பாய்
உழைப்பால் நீ உந்தன் உணவைக் கொள்வாய் எல்லாம் உனக்கு நலமாகும்

மக்களின் மக்களைக் காண்பீராக ~ உங்கள் வாழ்வினில் அமைதி நிலவிடுக
இறைவன் தரும் நல் சமாதானம் என்றென்றும் உங்களில் நிலைத்திடுமே

இரண்டாம் வாசகம்:
திருத்தூதர் பேதுரு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்.
அதிகாரம் 3, வசனங்கள் 1 முதல் 9 வரை.

திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். இதனால், அவர்களுள் சிலர் கடவுளுடைய வார்த்தையை ஏற்காதிருந்தாலும் மரியாதையுடைய உங்கள் தூய நடத்தையைக் கண்டு, கவரப்பட்டு நல்வழிப்படுத்தப்படுவர். அப்போது வார்த்தையே தேவைப்படாது. முடியை அழகுபடுத்துதல், பொன் நகைகளை அணிதல், ஆடைகளை அணிதல் போன்ற வெளிப்படையான அலங்காரமல்ல, மாறாக, மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும் அமைதியுமே உங்களுக்கு அழியாத அலங்காரமாய் இருக்கட்டும். கடவுள் பார்வையில் அதுவே விலையுயர்ந்தது. முற்காலத்தில் கடவுள் மேல் நம்பிக்கை கொண்டிருந்த தூய பெண்களும் இவ்வாறுதான் தங்களை அணி செய்து கொண்டார்கள். தங்கள்

கணவருக்குப் பணிந்திருந்தார்கள். அவ்வாறே, சாரா ஆபிரகாமைத் ‘தலைவர்’ என்றழைத்து அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார். நீங்களும் நன்மை செய்து, எவ்வகை அச்சுறுத்தலுக்கும் அஞ்சாதிருப்பீர்களென்றால் சாராவின் புதல்வியராய் இருப்பீர்கள். அவ்வாறே, திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியர் வலுக்குறைந்தவர்கள் என்பதை நீங்கள் உணர்ந்து, அவர்களோடு இணைந்து வாழுங்கள். வாழ்வுதரும் அருளுக்கு உடன் உரிமையாளராக இருப்பதால் அவர்களுக்கு மதிப்புக் கொடுங்கள். அப்போதுதான் நீங்கள் தடையின்றி இறைவேண்டல் செய்ய முடியும். இறுதியாக, நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டிருங்கள். பிறரிடம் இரக்கமும் சகோதரர் அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள். தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள். பழிச்சொல்லுக்குப் பழிச்சொல் கூறாதீர்கள். மாறாக ஆசி கூறுங்கள். ஏனென்றால் கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கிக் கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

வாச: இது ஆண்டவரின் அருள்வாக்கு.
எல்: இறைவனுக்கு நன்றி.

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:
அல்லேலூயா! அல்லேலூயா! ‘என் மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்,’ என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா!

நற்செய்தி வாசகம்:
அப: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
எல்: உம் ஆன்மாவோடும் இருப்பாராக.
அப: மத்தேயு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்.
எல்: ஆண்டவரே, மாட்சி உமக்கே!

அக்காலத்தில், பரிசேயர் இயேசுவை அணுகி, அவரைச் சோதிக்கும் நோக்குடன், ‘ஒருவர் தம் மனைவியை எக்காரணத்தையாவது முன்னிட்டு விலக்கி விடுவது முறையா?’ என்று கேட்டனர். அவர் மறுமொழியாக, ‘படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ‘ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்’ என்று நீங்கள் மறை நூலில் வாசித்ததில்லையா?’ என்று கேட்டார். மேலும் அவர், ‘இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.’ என்றார்.

அப: இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
எல்: கிறிஸ்துவே, உமக்குப் புகழ்.

(அருள்பணியாளர் சிறு மறையுரை வழங்குவார்)

# திருமணச் சடங்குகள்

(மணமக்கள், மணமக்களின் பெற்றோர் மற்றும் திருமண சாட்சிகள் இருவரும் பீடத்தின் முன் எழுந்து நிற்க வேண்டும்)

அப: அன்புமிக்க மணமக்களே, திருச்சபையின் திருப்பணியாளர்கள் முன்பாகவும், இத்திருக்கூட்டத்தின் முன்னிலையிலும் உங்கள் அன்பை நம் ஆண்டவர் முத்திரையிட்டுக் காத்தருளுமாறு இங்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் அன்பைக் கிறிஸ்து நிறைவாக ஆசீர்வதிக்கின்றார். ஏற்கெனவே அவர் உங்களைப் புனித திருமுழுக்கால் அர்ச்சித்துள்ளார், இப்போதோ மற்றொரு திருவருட்சாதனத்தின் வழியாக உங்களுக்கு அருள்வளம் ஈந்து, நீங்கள் ஒருவருக்கொருவர் என்றும் பிரமாணிக்கமாய் இருக்கவும், திருமணத்தின் ஏனைய கடமைகளை ஏற்று நிறைவேற்றவும் உங்களுக்கு ஆற்றல் அளிக்கின்றார். எனவே, உங்கள் கருத்தை அறிந்து கொள்ள, திருச்சபையின் முன்னிலையில் உங்களை வினவுகிறேன்.

மணமக்களின் ஒப்புதல்:

(மணமக்கள் இருவரும் தனித்தனியே வினாக்களுக்குப் பதில் கூற வேண்டும்)

அப: (மணமக்களின் பெயரைச் சொல்லி) நீங்கள் இருவரும் முழுமனச் சுதந்திரத்துடன் திருமணம் செய்து கொள்ள எவ்வித வற்புறுத்தலுமின்றி இங்கு வந்திருக்கின்றீர்களா?

மணமக்கள்: ஆம். வந்திருக்கின்றோம்.

அப: நீங்கள் மணவாழ்க்கை நெறியைப் பின்பற்றி, வாழ்நாளெல்லாம் ஒருவரை ஒருவர் நேசிக்கவும் மதிக்கவும் தயாராக இருக்கின்றீர்களா?

மணமக்கள்: ஆம். தயாராக இருக்கின்றோம்.

அப: இறைவன் உங்களுக்கு அருளும் மக்களை நீங்கள் அன்புடன் ஏற்று, கிறிஸ்துவின் போதனைக்கும் திருச்சபையின் சட்டத்திட்டத்திற்கும் ஏற்றப்படி வளர்ப்பீர்களா?

மணமக்கள்: ஆம். வளர்ப்போம்.

அப: நீங்கள் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புவதால், உங்கள் வலது கைகளைச் சேர்த்துப் பிடியுங்கள், இறைவன் திருமுன், திருச்சபையின் முன்னிலையில் உங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள்.

(மணமக்கள் இருவரும் தங்கள் வலது கைகளைச் சேர்த்து பிடிக்க வேண்டும்)

மணமகன்: (தனது பெயரைச் சொல்லி) என்னும் நான், (மணமகளின் பெயரைச் சொல்லி) என்னும் உன்னை என் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும் நான் உனக்குப் பிரமாணிக்கமாயிருந்து, என் வாழ்நாள் எல்லாம் உன்னை நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிக்கிறேன்.

மணமகள்: (தனது பெயரைச் சொல்லி) என்னும் நான், (மணமகனின் பெயரைச் சொல்லி) என்னும் உங்களை என் கணவராக ஏற்றுக் கொள்கிறேன். இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும் நான் உங்களுக்குப் பிரமாணிக்கமாயிருந்து, என் வாழ்நாள் எல்லாம் உங்களை நேசிக்கவும் மதிக்கவும் வாக்களிக்கிறேன்.

அப: திருச்சபையின் முன்னிலையில் நீங்கள் தெரிவித்த இந்த சம்மதத்தை ஆண்டவர் கனிவுடன் உறுதிப்படுத்தி, தம் ஆசியை உங்கள் மீது நிறைவாய் பொழிந்தருள்வாராக! இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.

எல் : ஆமென்.

திருமாங்கலியத்தை/மோதிரத்தை ஆசீர்வதித்தல்:

அப: (திருமாங்கலியத்தை/மோதிரத்தை ஆசீர்வதித்து) ஆண்டவரே, உம் அடியார் இவர்களையும் இவர்களது அன்பையும் ஆசீர்வதித்துப் புனிதப்படுத்தியருளும். இந்த திருமாங்கலியம்/மோதிரங்கள் இவர்களுக்குப் பிரமாணிக்கத்தின் அடையாளமாய் அமைந்து, ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பை ஆழந்த அன்பையும் நினைவூட்ட வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

திருமாங்கலியத்தை/மோதிரத்தை அணிவித்தல்:

மணமகன்: (மணமகளின் பெயரைச் சொல்லி) என் அன்புக்கும் பிரமாணிக்கத்துக்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கலியத்தை/மோதிரத்தை தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே அணிந்து கொள்.

மணமகள்: (மணமகனின் பெயரைச் சொல்லி) என் அன்புக்கும் பிரமாணிக்கத்துக்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கலியத்தை/மோதிரத்தை தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே அணிந்து கொள்கிறேன்.

(மாலைகள் இருந்தால் அவற்றை அருள்பணியாளர் ஆசீர்வதித்து எடுத்துத் தர, மணமக்கள் ஒருவரொருவருக்கு மாலை அணிவிக்கலாம்)

நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு:

அப: அன்புமிக்க சகோதரர் சகோதரிகளே, இப்புதிய குடும்பத்தின் அன்பு எப்போதும் தொடர்ந்து வளர வேண்டுமென்று இவர்களுக்காக மன்றாடுவோம்.

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. இப்பொழுது திருமணத்தில் ஒன்றிணைந்த (மணமக்களின் பெயரைச் சொல்லி) இவர்கள் இருவரும் தங்களது இல்லற வாழ்வில் என்றும் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகிலும் திருச்சபையிலும் அமைதி நிலவ வேண்டுமென்றும், திருச்சபையின் ஒற்றுமை மேன்மேலும் வளர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கானாவூர் திருமணத்தில் மணமக்களுக்கு ஆசியளித்தது போல், நீர் இம்மணமக்கள் (மணமக்களின் பெயரைச் சொல்லி) இருவருக்கும் ஆசியளித்து, உம் அன்புக்கு அடையாளமாக மக்களைப் பெற்று அவர்கள் என்றும் மகிந்திருக்கச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இப்புதிய மணமக்கள் (மணமக்களின் பெயரைச் சொல்லி) இருவரும் அமைக்கும் இல்லமும், மற்ற கிறிஸ்தவக் குடும்பங்கள் அனைத்துமே தம் திருமண அருளில் என்றும் நிலைத்து நிற்கவும், உம் திருப்பெயருக்கு ஏற்ற சாட்சிகளாயத் திகழவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. இங்கிருக்கும் அனைவரும் குறிப்பாக இங்கே கூடியிருக்கும் குடும்பங்களும், தங்களின் திருமண அருளைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அப: நமது தனிப்பட்ட தேவைகளுக்காக சற்று நேரம் மௌனமாக செபிப்போம்...

அப: தந்தையே, உம் பிள்ளைகளாகிய இப்புதிய மணமக்களுக்கு உண்மையான அன்பை நீர் தாராளமாய் வழங்குவதால், இவர்கள் நிறைந்த ஒற்றுமையோடு வாழ வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம். நீர் இணைத்த இவ்விருவரையும் ஒன்றும் பிரிக்காதிருப்பதாக. உம் ஆசி பெற்ற இவர்களை எத்தீங்கும் தீண்டாதிருப்பதாக. இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

# நற்கருணை வழிபாடு

காணிக்கைப் பாடல்:
அன்பிற்கே எம்மை அர்ப்பணித்தோம் அனைத்தும் பகிர்ந்தே வாழுவோம் ~ 2
இதுவே எம் காணிக்கை ~ 4

எமது காணிக்கை உமது ஆவியால் புனிதம் ஆக வேண்டும்
இதனால் அகிலமே மீட்பின் பாதையை இன்றே காண வேண்டும்
எங்கள் உழைப்பின் பயன்களும் நிலத்தின் கொடைகளும்
உமக்குப் புகழ் தர உலகம் உயர்ந்திட எம்மையே பலி தந்தோம்

அன்புப் புரட்சியே வாழ்வு மலர்ச்சியாய் மாற்றும் பலியில் இணைந்தோம்
நீதி அமைதியும் மனிதநேயமும் பலியின் பொருளாய் ஏற்றோம்
இந்த ஆழ்ந்த உணர்வினில் நாளும் இணைந்திட
தாழ்வு நீங்கிட வாழ்வு ஓங்கிட எம்மையே பலி தந்தோம்

காணிக்கைப் செபம்:

அப: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் உமது வள்ளன்மையிலிருந்து நாங்கள் இந்த அப்பத்தைப் பெற்றுள்ளோம். நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமான இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இது எங்களுக்கு வாழ்வு அளிக்கும் அப்பமாக மாறும்.

எல்: இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக.

அப: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் உமது வள்ளன்மையிலிருந்து நாங்கள் இந்த இரசத்தைப் பெற்றுள்ளோம். திராட்சைச் செடியும் மனித உழைப்பின் பயனுமான இந்த இரசத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். இது எங்கள் ஆன்மீகப் பானமாக மாறும்.

எல்: இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக.

அப: சகோதர சகோதரிகளே, என்னுடையதும் உங்களுடையது மான இப்பலி எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனுக்கு ஏற்றதாகும்படி மன்றாடுங்கள்.

எல்: ஆண்டவர் தமது பெயரின் புகழ்ச்சிக்காகவும் மாட்சிக்காகவும் நமது நன்மைக்காகவும் புனிதத் திரு அவை அனைத்தின் நலனுக்காகவும் உமது கையிலிருந்து இப்பலியை ஏற்றுக்கொள்வாராக.

காணிக்கை மீது மன்றாட்டு:

அப: ஆண்டவரே, திருமணத்தின் புனித ஏற்பாட்டைச் சிறப்பிக்க நாங்கள் ஒப்புக்கொடுக்கும் இக்காணிக்கையை ஏற்க உம்மை வேண்டுகின்றோம். உமது

நன்மையால் நீர் நிறுவிய இவ்வேற்பாட்டை உமது பராமரிப்பினால் தொடர்ந்து காத்தருள்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

நற்கருணை மன்றாட்டு:

அப: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல்: உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

அப: இதயங்களை மேலே எழுப்புங்கள்.

எல்: ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.

அப: நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

எல்: அது தகுதியும் நீதியும் ஆனதே.

அப: ஆண்டவரே, தூயவரான தந்தையே, என்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும். எங்கள் கடமையும் மீட்புக்கு உரிய செயலும் ஆகும்.

திருமண உடன்படிக்கையை மன ஒற்றுமையின் இனிய நுகத்தாலும் அமைதியின் முறிவுறாத பிணைப்பாலும் நீர் ஏற்படுத்தினீர். அதனால் புனிதத் திருமணத்தின் தூய, பயனுள்ள அன்பு உமக்குச் சொந்தமான பிள்ளைகளைத் தருவதற்கு உதவுகின்றது. ஏனெனில் ஆண்டவரே, உமது பராமரிப்பினாலும் அருளினாலும் திருமணத்தின் இரு பயன்களைச் சொல்லற்கரிய முறையில் விளைவிக்கின்றீர். பிள்ளைகளின் பிறப்பால் உலகத்தை அணிசெய்கின்றீர். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக வரும் அவர்களது மறு பிறப்பால் திரு அவையை வளரச் செய்கின்றீர்.

ஆகவே வானதூதர், புனிதர் அனைவரோடும் நாங்கள் சேர்ந்து, உமக்குப் புகழ்ச்சிப் பண் இசைத்து, முடிவின்றிப் பாடுவதாவது:

தூயவர் கீதம்:

தூயவர், தூயவர், தூயவர். வான்படைகளின் கடவுளாம் ஆண்டவர்.
விண்ணகமும் மண்ணகமும் உமது மாட்சியால் நிறைந்துள்ளன.
உன்னதங்களிலே ஓசன்னா!
ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவர்.
உன்னதங்களிலே ஓசன்னா!

# நற்கருணை மன்றாட்டு 2

அப: ஆண்டவரே, நீர் மெய்யாகவே தூயவர், தூய்மை அனைத்துக்கும் ஊற்று. ஆகவே உம்முடைய ஆவியைப் பொழிந்து, இக்காணிக்கைகளைத் தூய்மைப்படுத்த உம்மை வேண்டுகின்றோம். இவ்வாறு, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலும் ✠ இரத்தமுமாக எங்களுக்கு இவை மாறுவனவாக.

அவர் பாடுபட உளம் கனிந்து தம்மைக் கையளித்த போது அவர் அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, தம் சீடர்களுக்கு அளித்துக் கூறியதாவது:

அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள். ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்.

அப: அவ்வண்ணமே, இரவு விருந்தை அருந்தியபின், அவர் திருக்கிண்ணத்தை எடுத்து, மீண்டும் உமக்கு நன்றி கூறி, தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:

அனைவரும் இதிலிருந்து பெற்றுப் பருகுங்கள். ஏனெனில் இது புதிய, நிலையான உடன்படிக்கைக்கு உரிய என் இரத்தத்தின் கிண்ணம். இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும். இதை என் நினைவாகச் செய்யுங்கள்.

அப: நம்பிக்கையின் மறைபொருள்.

எல்: ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம். உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

அப: ஆகவே ஆண்டவரே, நாங்கள் கிறிஸ்துவின் இறப்பினையும் உயிர்ப்பினையும் நினைவு கூர்ந்து, வாழ்வு தரும் அப்பத்தையும் மீட்பு அளிக்கும் கிண்ணத்தையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். உம் திருமுன் நின்று உமக்கு ஊழியம் புரியத் தகுந்தவர்கள் என எங்களை ஏற்றுக்கொண்டீர். எனவே உமக்கு நன்றி செலுத்துகின்றோம். மேலும் கிறிஸ்துவின் உடலிலும் இரத்தத்திலும் பங்குகொள்ளும் எங்களைத் தூய ஆவியார் ஒன்று சேர்க்க வேண்டும் என உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகின்றோம்.

ஆண்டவரே, உலகெங்கும் பரவி இருக்கும் உமது திரு அவையை நினைவு கூர்ந்தருளும். எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், எங்கள் பேராயர் வில்லியம் கோ, எல்லாத் திருநிலையினர் ஆகிய அனைவரோடும் உமது திரு அவை அன்பில் நிறைவு பெறச் செய்தருளும்.

ஆண்டவரே, இன்று திருமணத்தால் ஒன்றிணைக்க நீர் திருவுளம் கொண்ட (மணமக்களின் பெயரைச் சொல்லவும்) இவர்களை நினைவு கூர்ந்தருளும். இவ்வாறு உமது அருளால் ஒருவர் மற்றவருக்கு உரிய அன்பிலும் அமைதியிலும் இவர்கள் நிலைத்திருக்கச் செய்தருளும்.

மேலும் உயிர்த்தெழும் எதிர்நோக்குடன் துயில்கொள்ளும் எங்கள் சகோதரர் சகோதரிகளையும் இறந்தோர் அனைவரையும் இரக்கத்துடன் நினைவுகூர்ந்து, உமது திருமுக ஒளியினுள் ஏற்றருளும். எங்கள் அனைவர் மீதும் இரக்கமாயிரும். கடவுளின் கன்னித் தாயான புனித மரியா, அவருடைய கணவரான புனித யோசேப்பு, புனிதத் திருத்தூதர்கள், இவ்வுலகில் உமக்கு உகந்தவராய் இருந்தோர் ஆகிய புனிதர் அனைவருடனும் நாங்கள் நிலைவாழ்வில் பங்குகொள்ளும் தகுதி பெற்று, உம் திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மைப் புகழ்ந்தேத்தும் வரம் அருள உம்மை மன்றாடுகின்றோம்.

அப: இவர் வழியாக, இவரோடு, இவரில், எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையே, தூய ஆவியாரின் ஒன்றிப்பில், எல்லாப் புகழும் மாட்சியும், என்றென்றும் உமக்கு உரியதே.

எல்: ஆமென்.

அப: மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, இறைப்படிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்:

எல்: விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக! எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்.

அப: அன்புமிக்க சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவில் இப்போது மணமுடித்த அவரது அடியார்களாகிய இம்மணமக்கள் மீது ஆண்டவர் தம் அருளின் ஆசியை இரக்கமுடன் பொழியவும் புனித உடன்படிக்கையால் இணைந்த இவ்விருவரும் தூய நற்கருணை வழியாக அன்பினால் ஒரே உள்ளம் படைத்தவர்களாகத் திகழவும் ஆண்டவரிடம் பணிவுடன் மன்றாடுவோம்.

(எல்லாரும் சிறிது நேரம் அமைதியாக மன்றாடுகின்றனர்)

அப: இறைவா, நீர் உமது வல்லமையினால் ஒன்றுமில்லாமலே அனைத்தையும் படைத்தீர். படைப்புகளின் உற்பத்தியை எல்லாம் ஒழுங்குபடுத்தியபின், உமது சாயலாக ஆணையும் பெண்ணையும் படைத்து, ஆணுக்குப் பெண்ணை

இணைபிரியாத் துணையாக ஏற்படுத்தினீர். இவ்வாறு அவர்கள் இனி இருவரல்லர், ஒரே உடல். எனவே நீர் ஒன்றாக இணைக்கத் திருவுளம் கொண்டதை ஒருபோதும் பிரித்தலாகாது எனக் கற்பித்தீர்.

இறைவா, கிறிஸ்துவும் திருஅவையும் ஒன்றித்திருக்கும் மறைபொருளைத் திருமண உடன்படிக்கையால் முன்னுணர்த்தும்படி, திருமணத்தின் பிணைப்பைப் புனிதப்படுத்திச் சிறப்பித்தீர்.

இறைவா, ஆணுடன் பெண்ணை இணைத்து முதன்முதலாக ஏற்படுத்திய குடும்பத்துக்கு நீர் அருளிய ஆசி, பிறப்புநிலைப் பாவத்தின் தண்டனையாலோ பெருவெள்ளத்தின் தீர்ப்பினாலோ எடுக்கப்படவில்லை. திருமணத்தில் ஒன்றாய் இணைக்கப்பெற்று, உமது ஆசியை நாடி நிற்கும் உம் அடியார்கள் இவர்களைக் கனிவாய்க் கண்ணோக்கியருளும். தூய ஆவியாரின் அருளை இவர்களில் பொழிந்து இவர்களின் இதயங்களில் உமது அன்பை ஊற்றியருளும். அதனால் திருமண உடன்படிக்கையில் இவர்கள் உண்மையில் நிலைத்திருப்பார்களாக.

உம் அடியார்களாகிய (மணமக்களின் பெயரைச் சொல்லவும்) இவர்களில் அன்பும் அமைதியின் அருளும் குடி கொண்டிருப்பனவாக. திருநூலில் போற்றப்பெறும் புனித மகளிரை இவர் பின்பற்றுவாராக. இவருடைய கணவரின் இதயம் இவர்மீது நம்பிக்கை கொண்டிருப்பதாக. இவரைத் தமக்குச் சமமான துணைவர் என்றும் அருள் வாழ்வில் தம்மோடு பங்காளர் என்றும் ஏற்று, இவருக்குத் தகுந்த மதிப்பு அளித்து, கிறிஸ்து தம் திரு அவையை அன்பு செய்வது போல அவரும் தம் மனைவியை என்றும் அன்பு செய்வாராக.

எனவே ஆண்டவரே, உம்மை இப்போது வேண்டுகின்றோம். உம் அடியார்களாகிய (மணமக்களின் பெயரைச் சொல்லவும்) இவர்கள் இருவரும் இணைந்து நம்பிக்கையிலும் உம் கட்டளைகளிலும் நிலைத்திருப்பார்களாக. தம் மண வாழ்வில் ஒன்றிணைந்து, நன்னடத்தையில் சிறந்து விளங்குவார்களாக. நற்செய்திப் படிப்பினையால் உறுதியடைந்து, அனைவர் முன்னும் கிறிஸ்துவுக்குச் சிறந்த சாட்சிகளாய்த் திகழ்வார்களாக. ஆண்டவரே, இவர்களுக்கு மக்கட்பேறு அளித்தருளும். நற்பண்புகளில் சிறந்த பெற்றோராய் இவர்கள் வாழ்ந்து, தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பார்களாக. இவர்கள் தாங்கள் விரும்பும் முதுமை அடைந்து புனிதருக்கு உரிய வாழ்வுக்கும் விண்ணரசுக்கும் வந்து சேர்வார்களாக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

அப: ஆண்டவருடைய அமைதி உங்களோடு என்றும் இருப்பதாக.
எல்: உம் ஆன்மாவோடும் இருப்பதாக.
அப: ஒருவருக்கொருவர் அமைதியைப் பகிர்ந்துகொள்வோம்.

மன்னிப்பு மன்றாட்டு:
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே, எம் மேல் இரக்கம் வையும்.
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே, எம் மேல் இரக்கம் வையும்.
உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே, எமக்கு அமைதி அருளும்.

அப: ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே, நான் உட்கொள்ளும் உம் திரு உடலும் திரு இரத்தமும் என்னை நீதித் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உள்ளாக்காமல், உமது பரிவிரக்கத்தால் என் மனதுக்கும் உடலுக்கும் பாதுகாப்பாகவும் நலம் அளிக்கும் அருமருந்தாகவும் இருப்பனவாக.

அப: இதோ, இறைவனின் செம்மறி, இதோ, உலகின் பாவங்களைப் போக்குபவர். செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றோர் பேறுபெற்றோர்.
எல்: ஆண்டவரே, நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும், எனது ஆன்மா நலம் அடையும்.

அப: கிறிஸ்துவின் திரு உடலும் திரு இரத்தமும் என்னைக் காத்து நிலைவாழ்வு அளிப்பதாக.
எல்: ஆமென்.

திருவிருந்துப் பாடல்:
இனிய நெஞ்சங்களே! இணைந்து நில்லுங்களே!
இனிய விருந்திதுவே! அருந்தச் செல்லுங்களே!
இது இறைவன் அருளும் திருவிருந்து
புது வாழ்வு வழங்கும் அரும் மருந்து

இறைவனின் செம்மறியே இங்கே பலியானார்
அழியா வாழ்வு தர அவரே விருந்தானார்
ஆண்டவர் அவர் என்று அறிக்கை செய்திடுவோம்
அவரில் ஒன்றிணைந்து நாமும் அகமே மகிழ்ந்திடுவோம்

வாழ்க்கைப் பாதையிலே ஒளிரும் சுடரானார்
பயணம் செல்கையிலே அவரே துணையானார்
தீபங்கள் ஒளிரட்டுமே! கீதங்கள் முழங்கட்டுமே!
புதியதோர் உலகமுமே இந்தப் புவியினில் மலரட்டுமே!

திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு:

அப: மன்றாடுவோமாக.
ஆண்டவரே, இத்திருப்பலியின் ஆற்றலால் உமது பராமரிப்பின் ஏற்பாடுகளை உமது கனிவான அன்போடு நிறைவேற்றியருளும். இவ்வாறு புனிதக்குடும்பமாக நீர் ஒன்றிணைத்த இவர்கள் இருவரும், அன்பினால் ஒருமனப்பட்டிருக்கச் செய்வீராக. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

மணமக்களுக்கான சிறப்பு ஆசிர்:

அப: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல்: உம் ஆன்மாவோடும் இருப்பாராக.

அப: என்றுமுள்ள தந்தையாகிய இறைவன், நீங்கள் ஒருவர் மற்றவருக்குக் காட்டும் அன்பினால் உங்களை ஒருமனப்படுத்தி, கிறிஸ்துவின் அமைதி உங்களில் குடி கொள்ளவும் உங்கள் இல்லத்தில் என்றும் நிலைத்திருக்கவும் செய்தருள்வாராக.

எல்: ஆமென்.

அப: உங்கள் பிள்ளைகளால் ஆசியும் நண்பர்களிடமிருந்து ஆறுதலும் பெற்று அனைவருடனும் உண்மையான அமைதியுடன் வாழ்வீர்களாக.

எல்: ஆமென்.

அப: உலகிலே நீங்கள் இறையன்புக்குச் சாட்சிகளாய்த் திகழுங்கள். இவ்வாறு உங்கள் அன்பைப் பெற்று இன்னலுற்றோரும் வறியோரும் இறைவனின் நிலையான வீட்டில், உங்களை ஒரு நாள் நன்றியுணர்வுடன் வரவேற்பார்களாக.

எல்: ஆமென்.

அப: எல்லாம் வல்ல இறைவன், தந்தை, மகன், ✠ தூய ஆவியார் அங்கே கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் ஆசி வழங்குவாராக.

எல்: ஆமென்.

அப: சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று.

எல்: இறைவனுக்கு நன்றி.

வாழ்த்துப் பாடல்:

ஆண்டவரே இம்மணவாளரை ஆசீர்வதித்து ஆண்டருளும்.

திருமண வாழ்வின் தேவ மனம் அறிந்திட இவர்கள் வாழ வேண்டும்.
திருக்குடும்பத்தின் ஒளியினிலே தினம் இவர் வாழ்ந்திட அருள் புரியும்.
வேண்டுகிறோம் உம்மையே, காத்தருள்வீர் இறைவா.